செ.குறிப்பு: 113 நாள்: 5.11.08

## வை. திருநாவுக்கரசு மறைவு.

## முதலமைச்சர் கலைஞர் இரங்கல்.

சிங்கப்பூர் நாட்டின் தந்தை பெரியார் அவர்களின் தளபதியாகத் திகழ்ந்த தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களின் நம்பிக்கைக்கு பெரிதும் உரியவரும் – சிங்கப்பூரின் பிரபல நாளேடான "தமிழ் முரசு" இதழின் முன்னாள் ஆசிரியரும் – சிறந்த பத்திரிகையாளர்களில் ஒருவரும் – "அரசு" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப் பட்டவருமான என் அன்புக்குரிய அருமை நண்பர் சிங்கப்பூர் வை. திருநாவுக்கரசு அவர்கள் கடந்த சில ஆண்டுகளாக உடல் நலம் குன்றி யிருந்தவர் 5–11–2008 அன்று மறைந்து விட்ட செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன்.

நான் சிங்கப்பூர் சென்றிருந்த போது அத்தனை நாட்களும் என் அருகிலேயே இருந்து தமிழ்நாட்டிற்குத் தேவையான பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி உதவியதும், தமிழகத்திற்கு அவர் வரும்போதெல்லாம் என்னைச் சந்தித்து மகிழ்வதும் என் நினைவில் வருகின்றன.

இளம் பிராயம் முதல் தந்தை பெரியார் அவர்களின் கொள்கை களினால் கவரப்பட்டு, திராவிட இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர் சிங்கப்பூர் வை. திருநாவுக்கரசு.

அவரது மறைவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும் – நண்பர் களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.